# மெய்யான விடுதலையின் சிறந்த வார்த்தை




## 2.2 இந்த இரட்சிப்பு

**வேத வசனம்:** **இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்.**

*மத்தேயு 1:23*

**அறிக்கை:** **கர்த்தராகிய இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தால் நான் இரட்சிக்கப்பட்டுள்ளேன்**

**சத்தியம்:** தேவனுடைய குமாரன் இயேசு கிறிஸ்து உன்னதமான தன்னுடைய ஸ்தானத்தை விட்டு, பூமிக்கு இறங்கி வந்தார். அவரை விசுவாசிப்பவர்கள் யாவரும் பிதாவாகிய தேவனிடமிருந்து மன்னிப்பையும் இரட்சிப்பையும் பெற்றுக்கொள்ளும்படி சிலுவையில் மரித்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்.



### வேத பகுதி: லூக்கா 23:35-56., ஏசாயா 53:1-7

**பாடம்**

**1. தேவனின் சிறந்த அன்பு:** "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து நியாயமற்றமுறையில் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார். அவர் தாமாகவே முன்வந்து மனிதருடைய பாவங்களை தன்மேல் ஏற்றுக்கொண்டு மரித்தார். அவர் தாங்கொண்ணா வலியையும் மன வேதனைகளையும் மட்டுமல்ல, மனிதரால் கைவிடப்பட்டவராய் தனிமையை அனுபவித்தார். அவருடைய உறவினர்களும் நெருங்கிய நண்பர்களும் அவர் செய்பவைகளைப் புரிந்துகொள்ளாமல் அவர் செலுத்திக்கொண்டிருந்த விலைக்கிரயத்தைத் தவறாகப் புரிந்துகொண்டார்கள். (யோவான் 3:16)

**2. வேறுபட்ட மாறுத்தரங்கள்:** இயேசு கொல்கொதா மலையில் சிலுவையில் அறையப் பட்டப்போது அதைக்காணும்படி அநேகர் அங்கே சென்றார்கள். இயேசு சிலுவையில் தொங்குவதைக் கண்ட ஒவ்வொரும் வெவ்வேறான முறையில் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். சிலர் அவரை நேசிக்கவும் விசுவாசிக்கவும் செய்தார்கள். மற்றவர் கள் அவரால் இடரலடைந்து அவரை வெறுத்தார்கள். அதிகாரிகள் அவரை பரிகாசம் செய்யவும், போர்வீரர்கள் அவரைக் கேலி செய்தார்கள். (லூக்கா 23:35-36)

**3. பலிக்கான ஆட்டுக்குட்டி:** கர்த்தராகிய இயேசு உலகின் அனைத்து மக்களுக்காகவும் பலியிடப்பட்ட ஆட்டுக்குட்டியானார். "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி"என்று வேதவார்த்தைகள் குறிப்பிடுகிறது. (யோவான் 1:29, ஏசாயா 53:5,5)

**4. தேவனின் அன்பை நம்பு:** நாம் மனுக்குலத்தை ஆழமாக நேசிக்கும் தேவனுடைய அளவற்ற அன்பை விசுவாசிக்கவேண்டும். "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." என்று வேதபுத்தகம் நமக்கு சொல்லுகிறது. (ரோமர் 5:8)

**5. விசுவாசத்தால் கர்த்தரை ஏற்றுக்கொள்:** "அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று." "என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்." என்று தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது. (யோவான் 3:18, ரோமர் 10:9)

**முடிவுரை:** தேவன் உன்னை அதிகம் நேசிக்கிறார். அதைக்காண்பிக்க உனக்கான கிரயத்தை அவர் செலுத்தினார். மகா கொடூரமான தண்டனையை ஏற்றுக்கொண்டு மரித்தார். "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்."

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.